செ.வெ.எண்.75 நாள்.13.02.2018

**<u>காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், கீரப்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற மனுநீதிநாள் முகாமில் 45 பயனாளிகளுக்கு ரூ.66,250/– மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.</u>**

********************

செங்கல்பட்டு வட்டம், கீரப்பாக்கத்தில் மனுநீதிநாள் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் முருங்கமங்கலம், பெரிய அருங்கால், சிறிய அருங்கால் ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களது கோரிக்கை மனுக்களை வழங்கினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது,

கீரப்பாக்கம் ஊராட்சி மலைகிராமமாக உள்ளது. இந்த கிராமத்தின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என பல்வேறு தரப்பு மக்களின் கோரிக்கையை ஏற்று, அதனடிப்படையிலேயே தற்போது மனுநீதிநாள் முகாம் நடத்தப்படுகிறது. இங்கே முக்கிய பிரச்சனைகளாக பல்வேறு பிரச்சனைகள் மாவட்ட நிர்வாகத்தினால் எடுத்துரைக்கப்பட்டு, அதன்படி பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

மேலும், கீரப்பாக்கம் முதல் நல்லம்பாக்கம் வரையிலான சாலையானது அமைக்கப்பட வேண்டும் என நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. அதன்படி, மாவட்ட வன அலுவலர் சென்னை அவர்களுக்கும், கோட்டப்பொறியாளர் அலுவலகத்திலிருந்தும் அதனை பார்வையிட்டு, எந்த அடிப்படையில் அமைத்தால் உடனடியாக செயல்படுத்த முடியும் என்று ஆராய்ந்து அது தொடர் நடவடிக்கையில் இருக்கிறது. அதேபோல் இங்கு சில நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வழங்க தகுதியாக உள்ள அனைத்து பட்டாக்களும் வழங்கப்படும்.

அதேபோல் இங்கு 10 மின்கம்பங்கள் அமைக்கப்பட வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளீர்கள். அதற்கான மதிப்பீடு தயார் செய்து, அந்த பணியும் நடைபெறும். தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் ஒரு பொது கழிப்பறை அமைக்கப்பட வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளீர்கள். அதற்கான பணிகளும் நடந்து வருகிறது. கூடிய விரைவில் அது கட்டி முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். விநாயகபுரம் பகுதியில் அங்கன்வாடி மையம் அமைக்கப்பட வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர். அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. அதுவும் விரைவில் அமைக்கப்படும் என தெரிவித்தார்.

முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 7 பயனாளிகளுக்கும், இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கும், விதவை உதவித்தொகை திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கும் , ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்ட உதவித்தொகை ஒருவருக்கும், ஆதரவற்ற உதவித்தொகை 8 பயனாளிகளுக்கும், முதியோர் உதவித்தொகை 1 நபருக்கும், வேளாண் துறையின் மூலம் 2 பயனாளிகளுக்கும், ஸ்மார்ட் கார்டு 20 பேருக்கும், என 45 பயனாளிகளுக்கு ரூ.66,250/– மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

முன்னதாக, பல்வேறு துறைகளின் சார்பாக வைக்கப்பட்டிருந்த திட்ட விளக்க அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். பல்வேறு துறை அலுவலர்கள் தங்கள் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நலத்திட்டங்கள் மற்றும் நிதியுதவிகளை விவரிக்கும் வகையில் திட்ட அரங்குகளை அமைத்திருந்தனர். மேலும் பொதுமக்கள் அரசின் பல்வேறு நலத்திட்டங்களை அறிந்து கொள்ளும் வகையில் திட்ட அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.மரகதம் குமரவேல், சார் ஆட்சியர் திரு.ஜெயசீலன் இ.ஆ.ப., மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு.ஆறுமுகம், தனிதுணை ஆட்சியர் திரு.சக்திவேல், செங்கல்பட்டு வட்டாட்சியர் திரு.இப்ராகிம் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், கீரப்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற மனுநீதிநாள் முகாமில் 45 பயனாளிகளுக்கு ரூ.66,250/– மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.மரகதம் குமரவேல், சார் ஆட்சியர் திரு.ஜெயசீலன் இ.ஆ.ப., மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு.ஆறுமுகம் ஆகியோர் உள்ளனர்.